# தமிழ்நாடு அரசு
# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
## வட்டாட்சியர் அலுவலகம், செங்கோட்டை, தென்காசி மாவட்டம்

**அறிவிக்கை எண்: A2 / 695 / 2025** **நாள் : 09.10.2025**

தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டத்தில் காலியாகவுள்ள கிராம உதவியாளர் காலிப் பணியிடங்கள் நேரடி நியமனம் செய்வதற்கான இவ்வலுவலக அறிவிக்கை எண் : A2/695/2025, நாள் : 11.07.2025-ன் படி விண்ணப்பங்கள் பெறப்பட்டு வாசித்தல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு **17.09.2025 முதல் 23.09.2025** வரை நடைபெற்றது. இந்நிலையில் தற்போது சென்னை கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க.வ.நி2(2)/02-28/1/2024, **நாள் : 22.09.2025**-ன் படி கிராம உதவியாளர் பதவிக்கான உச்ச வயது வரம்பு உயர்த்தி கடிதம் வரப்பெற்றதன் பேரில் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. (குறிப்பு : இவ்வலுவலக அறிவிக்கை எண் : A2/695/2025, நாள் : **11.07.2025-ன்** படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள மற்றும் வாசித்தல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வருகை தந்த விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை) விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்கள் **https://tenkasi.nic.in** என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். கீழ்காணும் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் பூர்த்தி செய்து **10.10.2025 முதல் 24.10.2025 மாலை 05.45 மணிக்குள்** செங்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் வகையில் விண்ணப்பம் செய்ய வேண்டும். நேரம் கடந்து வரும் விண்ணப்பங்க்ள் ஏற்கப்படமாட்டாது. ஒரு நபர் ஒரு கிராமத்திற்கு மட்டும் விண்ணப்பம் செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| **பதவியின் பெயர்** | **கிராம உதவியாளர்** |
| **சம்பள விகிதம்** | **சிறப்பு காலமுறை ஊதியம் (நிலை - 06 (ரூ.11,100-ரூ.35,100)** |
| **வட்டத்தின் பெயர்** | **செங்கோட்டை** |
| **காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை** | **03** |

**இனசுழற்சி விபரம் :**

| வ. எண் | நிரப்பப்படவுள்ள கிராம எண் மற்றும் கிராமத்தின் பெயர் | இனசுழற்சி | வகுப்பு | முன்னுரிமை / முன்னுரிமை யற்றவர் | பொது ஆண் / பெண் | விதவை/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|---|
| 01 | 06.பண்பொழி | 13 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) மற்றும் சீர் மரபினர் (DNC) | முன்னுரிமை அற்றவர் | பொது | |
| 02 | 01.மேக்கரை | 14 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) (முஸ்லீம் தவிர) | முன்னுரிமை அற்றவர் | பொது | |
| 03 | 02.வடகரை மேல்பிடாகை | 15 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம் BC (M) | முன்னுரிமை பெற்றவர் | பொது | |

**வயது 01.07.2025 தேதிப்படி வயது கணக்கிடப்படும்.**

| வ.எ | பிரிவு | குறைந்த பட்ச வயது வரம்பு | அதிக பட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1. | பொதுப்பிரிவினர் | 21 | 32 |
| 2. | பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர் மரபினர் | 21 | 39 |
| 3. | பட்டியலினத்தவர் / பழங்குடியினர் (ம) ஆதரவற்ற விதவை | 21 | 42 |

**முன்னாள் இராணுவ பொதுப்பிரிவினருக்கு அதிகபட்சம் 50 வயதும் இதரப் பிரிவினருக்கு (BC/BC(M)/MBC/DNC/SC/SCA/ST) 55 வயதும் வழங்கப்படும்.**

**மாற்றுத்திறனாளிகளின் அதிகபட்ச வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்ட வயதிலிருந்து 10 ஆண்டுகள் வயது தளர்வு (Tamilnadu Govt. Servants (Conditions of Services) Act 2016.**

| | |
|---|---|
| கல்வித்தகுதி | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC - Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதி தேர்ச்சி / தோல்வி அடைந்திருக்க வேண்டும். (குறிப்பு : SSLC - (Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்) |

**இதர தகுதிகள். நிபந்தனைகள் (ம) இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

இவ்வலுவலக அறிவிக்கை எண் : A2/695/2025, நாள் 11.07.2025- இல் குறிப்பிட்டுள்ள தகுதிகள். நிபந்தனைகள் (ம) இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்.

- இப்பணியிடங்களுக்கான விண்ணப்ப படிவம் **https://tenkasi.nic.in** இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பங்களை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களை இணைத்து 10.10.2025 முதல் செங்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அலுவலக வேலை நாட்களில் **காலை 10.00 மணி முதல் மாலை 05.45 மணிக்குள்** விண்ணப்பம் செய்ய வேண்டும்.
- விண்ணப்பிக்க வேண்டிய கடைசி **நாள் : 24.10.2025.**
- விண்ணப்பதாரர்களுக்கு எழுதுதல், படித்தல் திறன் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்விற்கான அழைப்பாணை பின்னர் தனியே அனுப்பி வைக்கப்படும்.

**வருவாய் வட்டாட்சியர், செங்கோட்டை**

B2510100B